# Current Affairs - April

- புதிய வேளாண்சட்டங்களில் உள்ள சாதக, பாதகங்களை ஆராய்வதற்காக உச்சநீதிமன்றம் நியமித்த **சமரசக் குழு** தனது அறிக்கையை சமா்பித்தது
  - அந்தக்குழுவில் உள்ள உறுப்பினா்கள்
    1. பி.கே. மிஸ்ரா
    2. அனில் கன்வாட்
    3. அசோக் குலாட்டி
    4. பூபிந்தா் சிங்மான் (தொடக்கத்திலேயே குழுவில் இருந்து விலகி கொண்டாா்)
- இந்தியாவின் பொருளாதார வளா்ச்சி 2021 - 22 ஆம் நிதியாண்டில் **7.5 சதவீதம் முதல் 12.5 சதவீதமாக** இருக்கும் என்று உலக வங்கி கணிப்பு.
- உலகிலேயே முதல் முறையாக கரோனா தொற்றிலிருந்து விலங்குகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான தடுப்பூசியை பதிவு செய்துள்ள **நாடு – ரஷ்யா**
  - **காா்னிவாக் - கோவ்** தடுப்பூசியின் பெயா்
- நாட்டின் எஃகு உற்பத்தி 2020 ஆம் ஆண்டில் **19 சதவீதம் குறைந்து** 31.7 டன்னாக குறைந்துள்ளதாக இந்திய எஃகு மேம்பாட்டு சங்கம் அறிவிப்பு
  - **இந்திய எஃகு மேம்பாட்டு சங்கம் தலைமையிடம் அமைந்துள்ள இடம் புதுடெல்லி**
  - உலக அளவில் எஃகு உற்பத்தியில் இந்தியா **இரண்டாவது இடம்**

- ஒருநாள் கிரிக்கெட்டுக்கான ஐசிசி தரவரிசையில் பேட்ஸ்மேன்கள் பிரிவில் இந்திய கேப்டன் **விராட் கோலி முதலிடம்**
- சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடந்து வரும் ஏழாம் கட்ட அகழாய்வில் **2600** ஆண்டுகளுக்கு முற்பட்ட **பானை கண்டெடுப்பு**
- 2021 ம் ஆண்டிற்கான சர்வதேச வன பாதுகாவலர் விருதினை பெற்றவர் இராஜாஜி புலிகள் காப்பகத்தின் பாதுகாவலர் **மகிந்தர் கிரி**
  - **ஆசியாவிலேயே இந்த விருதினை** பெறும் ஒரே வனபாதுகாவலர் இவரே
- 2021 ம் ஆண்டிற்கான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இந்தியாவின் சிறந்த வங்கியாக **HDFC வங்கி தேர்வு**
- இந்திய திரைப்படத் துறையின் உயரிய விருதான **தாதா சாகேப் பால்கே விருது ரஜினிகாந்துக்கு** வழங்கப்படுவதாக மத்திய அரசு அறிவிப்பு
  - இந்திய சினிமாவின் தந்தை என போற்றப்படும் மறைந்த இயக்குநர், தயாரிப்பாளர், திரைக்கதை ஆசிரியரான தாதா சாகேப் பால்கே நினைவாக அவரது பெயரில் மத்திய அரசு **1969 ம் ஆண்டு முதல்** விருது வழங்கி வருகிறது
  - இந்திய **திரைத்துறையின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பை** வழங்கியவர்களுக்கு ஆண்டுதோறும் தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படுகிறது
  - தமிழகத்தில் நடிகர் **சிவாஜி கணேசன் (1996)**, இயக்குநர் **கே. பாலசந்தர் (2010)** ஆகியோரை தொடர்ந்து **51வது தாதா சாகேப்** பால்கே விருது தற்போது ரஜினிகாந்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

- புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்பு பணிகளுக்காக **ஜிஜசாட் 1** என்ற அதிநவீன **ஜியோ இமேஜிங் செயற்கைக்கோளை** இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் **ஏப்ரல் 18, 2021** அன்று விண்ணில் செலுத்துவதாக அறிவிப்பு.
    - ஜிஜசாட் **2268 கிலோ** எடை கொண்டது
    - இதன் **ஆயுட்காலம் 7** ஆண்டுகள்
    - இதிலுள்ள 5 விதமான 3டி கேமராக்கள் மற்றும் தொலைநோக்கி மூலம் புவிப்பரப்பை துல்லியமாக படம் எடுக்கவும் பார்க்கவும் முடியும்
- இந்திய ராணுவத்தின் மேற்கு பிரிவு தளபதியாக **லெப்டினன்ட் ஜெனரல் மஞ்சிந்தர் சிங்** பொறுப்பேற்பு
    - நாட்டுக்காக ஆற்றிய சிறப்பான பணிக்காக இவருக்கு **யூத் சேவா மெடல் (2015) மற்றும் வஷிஸ்ட் சேவா மெடல் (2019)** ஆகிய விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன.
- நாட்டிலேயே முதல் முறையாக தனியார் துறையை சேர்ந்த **மல்லிகா சீனிவாசன் பொதுத்துறை தேர்வு வாரிய (BESB) தலைவராக** நியமனம்
    - இவர் உறுப்பினராக பொறுப்பேற்கும் காலத்திலிருந்து **3 ஆண்டுகள் அல்லது 65 வயது** வரை இந்த பொறுப்பில் இருப்பார்
    - பொதுத்துறை தேர்வு வாரியமானது ஒரு தலைவர் மற்றும் மூன்று முழு நேர உறுப்பினர்களைக் கொண்டது
- உலக பொருளாதாரமையம் (WEF) வெளியிட்ட பாலின இடைவெளி குறியீட்டில் **இந்தியா 140 வது இடம்**

For Online Class sign up in www.natrajtnpsc.com
CONTACT : 7708174460

- சர்வதேச அளவில் சமூகம், பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியை ஆய்வு செய்து உலக பொருளாதாரமையம் வெளியிட்டு வருகிறது
- மொத்தம் 156 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் இந்தியா 140 வது இடம்
- 2020 ம் ஆண்டு இந்தியா **112 வது இடத்தைப்** பிடித்திருந்தது
- பாலின இடைவெளி குறியீட்டு பட்டியலில் **முதல் 5 நாடுகள்**
    1. ஐஸ்லாந்து
    2. ஃபின்லாந்து
    3. நார்வே
    4. நியூசிலாந்து
    5. ஸ்வீடன்
- பாலின இடைவெளி குறியீட்டு பட்டியலில் **கடைசி 5 நாடுகள்**
    - 156. ஆப்கானிஸ்தான்
    - 155. யேமன்
    - 154. ஈராக்
    - 153. பாகிஸ்தான்
    - 152. சிரியா

❖ சென்னையில் நடைபெற்ற ஸ்குவாஷ் சேலஞ்சர் போட்டியில் அமெரிக்காவின் **டோட் ஹாரிட்டி சாம்பியன்** பட்டம் வென்றார்.

❖ **வஜ்ர பிரகார் 2021** - இந்தியா மற்றும் அமெரிக்க நாட்டின் சிறப்பு படைகள் பங்கு பெற்ற கூட்டு ராணுவ படையின் சிறப்பு பயிற்சியின் பெயர்.

- 2020 ம் ஆண்டிற்கான **சரஸ்வதி சம்மன் விருதுக்கு** அறிவிக்கப்பட்டுள்ளவர் மராத்திய எழுத்தாளர் சரண்குமார் லிம்பாலே
- **Names of the women** – என்ற புத்தகத்தின் ஆசிரியர் **ஜீத் தாயில்**
- நாட்டில் முதல் முறையாக **சூரத்தின் ஹசிரா துறைமுகத்தில்** இருந்து **டையூ யூனியன் பிரதேசம்** வரை பயணிகள் சேவை கப்பல் தொடங்கி வைப்பு
- இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களை அனுப்பிய மாநிலங்கள் பட்டியலில் **தமிழ்நாடு இரண்டாவது** இடம்
  - **முதல் இடம் கேரளா மாநிலம்**
  - இந்த தரவுகளை மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ளது
  - **வந்தே பாரத்** - கொரோனா தொற்றின் போது உலகம் முழுவதும் சிக்கிக் கொண்ட இந்தியர்களை நாடு திரும்ப செய்வதற்கான திட்டத்தின் பெயர்
- இந்தியாவின் முதல் **இந்திய கொரிய நட்புறவுப் பூங்கா டெல்லியில்** தொடங்கப்பட்டுள்ளது
  - 1950 – 53 ல் நடைபெற்ற கொரியப் போரில் இந்தியா பங்கேற்றதை நினைவுகூறும் நினைவுச் சின்னமாக இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- **ராமசாமி ஆறுவரி நீலம் மற்றும் சிலோன் வரயன்நீலி (Ramaswami's six line blue and Ceylon varayanneli)** மேற்கு தொடர்ச்சி மலையில் புதியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள வண்ணத்துப் பூச்சியின் பெயர்

For Online Class sign up in www.natrajtnpsc.com
CONTACT : 7708174460

- **நீலக் கழுகு நடவடிக்கை** – வாக்காளர்களுக்கு பணம், பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்காக சென்னை மண்டல சுங்க இலாகா நடத்திய நடவடிக்கையின் பெயர்
- Agriculture in india : Contemporary in the context of Doubling formers income என்ற புத்தகத்தினை எழுதியவர் **மோகன் காண்டா**
- இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்தின் (IOCL) தலைவராக – **சுபாஷ் குமார்** நியமனம்
  - இதன் தலைமை அலுவலகம் அமைந்துள்ள **இடம் - புது டெல்லி**
- HOPE கூட்டமைப்பின் முதல் உலக நோய்த் தடுப்பு மற்றும் தளவாடங்கள் உச்சி மாநாடு நடைபெற்ற இடம் **ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி**
  - இந்தியா சார்பாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சர் **டாக்டர் ஹர்ஷவர்தன்** காணொலி மூலம் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்
- மகாராஷ்டிரா மாநிலம் தனது மாநிலத்தின் மேற்கு தொடர்ச்சி மலையின் **அம்போலி என்னும் பகுதியை** பல்லுயிர்ப் பெருக்க **பாரம்பரியத் தளமாக** அறிவித்துள்ளது
- ஏப்ரல் 1 முதல் மாநில அரசால் இயக்கப்படும் பேருந்துகளில் **பெண்கள் இலவசமாக பயணம் செய்ய** அரசு ஆணை வெளியிட்டுள்ள மாநிலம் - **பஞ்சாப்**
- மாநிலத்தின் அனைத்து குடிமக்களுக்கும் **இலவச சுகாதார காப்பீட்டுக்** வசதியினை வழங்கும் நாட்டின் முதல் மாநிலம் - **ராஜஸ்தான்**
- **ராகேஷ்வர் சிங்** - சத்திஸ்கர் மாநிலம் மாவோயிஸ்ட்கள் மீது நடத்தப்பட எண் கவுண்டரின் போது மாவோயிஸ்ட்களால் கடத்தப்பட்ட எல்லை பாதுகாப்பு **கோப்ரா படைப்பிரிவு** வீரரின் பெயர்

- உள்நாட்டு தேங்காய் எண்ணெய் துறையை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக **பாமாயில் இறக்குமதிக்கு தடை** விதித்துள்ள நாடு - **இலங்கை**
  - உலகின் மொத்த தேங்காய் சார்ந்த பொருட்கள் வர்த்தகத்தில் **இலங்கையின் பங்கு 12 சதவீதமாக** உள்ளது
- 2021 - 22 ம் நிதி ஆண்டில் இந்தியாவின் **பொருளாதார வளர்ச்சி 12.5** சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் (IMF) அறிவித்துள்ளது.
  - இது வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் வளர்ச்சி விகிதத்தை விட அதிகம்
- போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்ட இந்திய கோடீஸ்வரர்களின் பட்டியலில் தொடர்ந்து 13 வது ஆண்டாக **முகேஷ் அம்பானி முதலிடம்**
  - இரண்டாவது இடம் கவுதம் அதானி
  - **மூன்றாவது இடம் ஷிவ் நாடார்**
- சர்வதேச கால்பந்து அமைப்பான **ஃபிஃபா [FIFA] ல்** இருந்து இடைநீக்கம் செய்யபட்ட நாடுகள் - **பாகிஸ்தான் மற்றும் சாத்**
- **டாப்ஸ் திட்டம்** - ஒலிம்பிக்கில் பதக்க வாய்ப்புள்ளவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் மத்திய அரசின் திட்டத்தின் பெயர்
- ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ரஷ்யாவைச் சேர்ந்த ஒலிம்பிக் பதக்க தடகள போட்டியாளர்கள் **ஆன்ட்ரே சில்னோவ், நடால்யா அன்ட்யுக்** ஆகியோருக்கு 4 ஆண்டு தடை விதிப்பு.

- டெல்லி தமிழ்ச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் சாகித்ய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது பெற்றவருமான **முனைவர் எச். பாலசுப்பிரமணியம்** காலமானார்
- கரோனா தடுப்பூசி போடுவதை ஊக்குவிக்க **மார்ச் 14 முதல் மார்ச் 16 வரை தடுப்பூசி திருவிழா** நடத்தப்படுவதாக மத்திய அரசு அறிவிப்பு
- **யு எஸ் எஸ் ஜான் பால் ஜோன்ஸ்** - இந்திய கடல் பகுதியில் அனுமதியின்றி நூழைந்த அமெரிக்க கடற்படை பயிற்சி போர்க்கப்பலின் பெயர்.
- பிரிட்டன் அரசி இரண்டாம் எலிசபெத்தின் கணவரான **இளவரசர் பிலிப்** காலமானார்.
  - 99 வயதான அவர் பிரிட்டன் வரலாற்றில் அரசர் அல்லது அரசியின் வாழ்கைத் துணைகளுக்கு அளிக்கப்படும் **கன்சார்ட் என்ற பட்டத்தை** மிக நீண்டகாலமாக பெற்றிருந்தவர்.
- ஒடிசா முன்னாள் முதல்வர் **ஹரேகிருஷ்ணா எழுதிய ஒடிசா இதிகாசம்** என்ற நூலின் இந்தி மொழி பெயர்ப்பு பதிப்பை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.
- **இன்ஜெனியூட்டி** – நாசாவால் செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் தரையிறக்கப்பட்ட மினி ஹெலிகாப்டரின் பெயர்
- அறிவியல் ஆராய்ச்சிக்கான 30வது **GD பிர்லா விருதுக்கு** தெர்ந்தெடுக்கப்பட்டவர் - சுமன் சக்கரவர்த்தி
  - அறிவியல் மற்றும் தொழில்நூட்ப துறையில் சிறப்பான பங்களிப்பினை ஆற்றும் 50 வயதுக்கு உட்பட்ட **சிறந்த இந்திய அறிவியலாளர்களுக்கு** GD பிர்லா விருது வழங்கப்படுகிறது
- ஏப்ரல் 8 - சர்வதேச ரோமானியர்கள் தினம்

- 1990 ம் ஆண்டு முதல் சர்வதேச ரோமானிய தினம் சர்வதேச ரோமானிய ஒன்றியத்தால் கொண்டாடப்படுகிறது

❖ ஏப்ரல் 7 – உலக சுகாதார தினம்

- 2021 ம் ஆண்டிற்கான கருத்துரு **“சிறந்த ஆரோக்கியமான உலகை உருவாக்குதல்”**

❖ 2021 ம் ஆண்டிற்கான 17வது **BIMSTEC** நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டினை காணொலி வாயிலாக **நடத்திய நாடு இலங்கை**

- BIMSTEC – Bay of Bengal Initaitive Multisector Technical and Economic Cooperation
- BIMSTEC அமைப்பில் 7 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன ( இலங்கை, தாய்லாந்து, நேபாளம், இந்தியா, பூடான், வங்கதேசம், மியான்மர்)

❖ **இந்தியாவின் முதல் பண்ணை சார்ந்த சூரிய சக்தி நிலையத்தை** அமைக்கும் முதல் மாநிலம் - **ராஜஸ்தான்**

❖ ஏப்ரல் 5 – தேசிய கடல்சார் தினம்

- இத்தினம் 1964 ம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது
- 2021 ஆண்டுக்கான கருத்துரு **கோவிட் 19 தொற்றுக்கு அப்பாற்பட்ட நிலையான கப்பல் போக்குவரத்து**

❖ இந்திய தேர்தல் ஆணையத்தின் **24வது தலைமை தேர்தல்** ஆணையராக **சுஷீல் சந்திரா** நியமனம்

- 2022 ஆம் ஆண்டு மே 14 வரை சுஷீல் சந்திரா அப்பொறுப்பில் நீடிப்பார்

- தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுவதற்கு முன்பாக **மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவராக** பணியாற்றி வந்தார்

❖ அண்ணா பல்கலைக்கழகத்தை நிர்வகிக்க உயர்கல்வித்துறைச் செயலாளர் **அபூர்வா தலைமையில் குழுவை** அமைத்து தமிழக அரசு உத்தரவு

❖ தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாய நிபுணத்துவ உறுப்பினராக **கே. சத்யகோபால் நியமனம்**

- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (National Green Tribunal) இந்திய அரசியலமைப்பின் **21வது சட்டப்பிரிவுக் கூற்றின் கீழ் 2010 இல்** நிறுவப்பட்டது
- இந்தத் தீர்ப்பாயத்தின் தலைமையிடம் **புது தில்லியிலும்** கிளைகள் சென்னை, போபால், புனே மற்றும் கொல்கத்தாவிலும் நிறுவப்பட்டுள்ளன

❖ இந்தியாவில் கொரோனா நிலவரத்தில் முன்னேற்றம் ஏற்படும் வரை **ரெம்டெசிவிர் ஊசி மருந்து** மற்றும் **ரெம்டெசிவிர் ஆக்டிவ்** மருந்துப் பொருள்களை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்துள்ளது

- அமெரிக்காவின் ஜிலீட் சயின்சஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து ரெம்டெசிவிர் ஊசியை 7 இந்திய நிறுவனங்கள் தயாரித்து வருகின்றன.

❖ **டிக்கா உத்சவ்** - ஏப்ரல் 11 முதல் 14 ஆம் தேதி வரை மத்திய அரசால் கடைபிடிக்கப்படும் **தடுப்பூசி திருவிழாவின் பெயர்**

❖ ஐக்கிய அரபு அமீரகத்தின் உயரிய விருதான **சிவிலியன் விருது** வழங்கி கௌரவிக்கப்பட்டவர் இந்தியாவை சேர்ந்த தொழிலதிபரும் **லூலூ குழுமத்தின் தலைவருமான யூசுப் அலி**

For Online Class sign up in www.natrajtnpsc.com
CONTACT : 7708174460

- அபுதாபியில் வசித்து வரும் 5 வயதான இந்திய அமெரிக்க வம்சாவழியை சேர்ந்த **கியாரா கவுர் என்ற சிறுமி** 2 மணி நேரத்திற்குள் 36 புத்தகங்களை படித்து உலக சாதனை படைத்துள்ளார்.
- ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை நடைபெறும் **இடம் - வியன்னா**
- ரஷ்யாவின் **ஸ்புட்னிக் வி கரோனா தடுப்பூசியை** இந்தியாவில் பயன்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு நிபுணர் குழு பரிந்துரை
  - நாட்டில் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த **கோவேக்ஸின்,** சீரம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட **கோவிஷீல்ட்** ஆகிய கொரோனா தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன
- 2021 ம் ஆண்டுக்கான இந்திய விமானப்படை தளபதிகள் மாநாடு நடைபெறும் **இடம் - புது டெல்லி**
  - இந்திய விமானப்படையின் செயல்பாட்டு திறன்கள் குறித்து ஆராய்ந்து, எதிர்காலத்துக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்த மாநாடு 6 மாதத்திற்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படுகிறது
  - இந்திய விமானப்படை நாள் **அக்டோபர் 8**
- **சாந்திர் ஆக்ரோசேனா (அமைதிக்காக முன்னனி வகிப்போர்)** – வங்கதேசத்தில் நடைபெற்ற பயங்கரவாத எதிர்ப்புக்கான பன்னாட்டு கூட்டுப் பயிற்சியின் பெயர்
  - இதில் இந்தியா, வங்கதேசம், பூடான், இலங்கை ஆகிய நாடுகளின் ராணுவ வீரர்கள் பங்கேற்றனர்

- அமெரிக்கா, பிரிட்டன், துருக்கி, குவைத், சிங்கப்பூர், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் பார்வையாளர்களாக இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டனர்

❖ அமெரிக்காவில் நடைபெற்ற சார்லஸ்டன் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஒற்றையர் பிரிவில் **ரஷ்யாவின் வெரோனிகா** குதர்மெடோவா **சாம்பியன்** பட்டம் வென்றார்

❖ சார்லஸ்டன் ஓபன் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் **நெதர்லாந்தின் டெமி ஷீர்ஸ்** மற்றும் **அமெரிக்காவின் நிகோலா மெலிகார்** இணை **சாம்பியன்** பட்டம் வென்றது

❖ **ஆஹார் கிராந்தி** – சீரான ஊட்டச்சத்து உணவின் தேவையை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் மத்திய அரசின் திட்டத்தின் பெயர்

- இதன் **குறிக்கோள் நல்ல உணவு, நல்ல அறிவாற்றல்.**

❖ **Narrow Line Seyferi – 1(NLS 1)** - இந்திய ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கபட்ட வெகு தொலைவில் அமைந்த காமா கதிரினை வெளியிடும் அண்டத்தின் பெயர்

❖ தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சி மன்றத்தின் **முதல் பெண் பொது இயக்குனராக – பூனம் குப்தா** நியமனம்

❖ சர்வதேச திரைப்பட துறையில் சிறந்த விளங்குவோருக்கு வழங்கப்படும் பிரிட்டிஷ் அகாதமி **திரைப்படம் விருதுகள் (BAFTA-2021)** அறிவிப்பு.

- சிறந்த திரைப்படம் - **Nomadland**
- சிறந்த இயக்குனர் - **சாலி சாவே (Nomadland)**

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வாகியுள்ள முதல் இந்திய இளம் பெண் மல்யுத்த வீராங்கனை – **சோனம் மாலிக்**
- **16 வது தமிழ்நாடு** சட்டமன்ற தேர்தல் பதிவான மொத்த வாக்குகள் சதவீதம் 72.78%
    - **அதிக வாக்கு பதிவு மாவட்டம் - கரூர் (83.92%)**
    - குறைவான வாக்கு பதிவு மாவட்டம் - சென்னை (59.06%)
- முகக்கவசம் அணிவதை பழக்கமாக்க செய்வதற்காக **மாஸ்க் அபியான்** என்ற முன்னெடுப்பினை தொடங்கியுள்ள மாநிலம் - **ஒடிசா**
- சத்தீஸ்கர் மாநில அரசால் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கபடும் **வீரணி விருதுக்கு தேர்வு** செய்யபட்டவர் - இந்திய தடகள வீரர் - **தூத்தி சந்த்.**
- **ஜாலியன் வாலாபாக் படுகொலை நாள் - ஏப்ரல் 13**
    - ஜாலியன் வாலாபாக் படுகொலை 1919ம் ஆண்டில் ஏப்ரல் 13ல் **அமிர்தசரஸில்** நடைபெற்றது.
    - இதை விசாரிக்க அமைக்கபட்ட **குழு - ஹண்டர் குழு**
- **அனாமாய திட்டம்** - **பழங்குடியின மக்களின்** சுகாதாரம் மற்றும் ஊட்டசத்து நிலையினை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் சிறப்பு திட்டத்தின் பெயர்
- **மது கிரந்தி போர்ட்டல்** - தேனீ வளர்ப்பிற்கான **தேசிய தேனீ வாரியத்தால்** வெளியிடப்பட்டுள்ள இணையதள சேவையின் பெயர்.
- ஆசியாவின் மிகப்பெரிய ஆன்லைன் **வர்த்தகத்திற்கான மையம் ஹரியானா மாநிலம் குருசிராமில்** பிளிப்கார்ட் நிறுவனத்தால் அமைக்கபட்டுள்ளது.

- இந்தயாவில் பசுமைக் கடன் பத்திரங்களை **(Green bonds)** வெளியிட்டுள்ள முதல் மாநகராட்சி – உத்திரபிரதேச மாநிலத்தின் **காஷியாபாத் மாநகரட்சி.**
- இந்தியாவின் முதலாவது முழுமையாக **மின்மயமாக்கபட்ட** இரயில்வே மண்டலம் - **மேற்கு மத்திய இரயில்வே மண்டலம்**
  - தலைமையிடம் - **ஜபல்பூர்.**
- **செரோஜா புயல் (Seroja)** – ஆஸ்திரேலியா நாட்டை தாக்கிய புயலின் பெயர்
- **மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும்** இஸ்ரோவின் **ககன்யான் திட்டத்தில்** இணைந்து செயல்படுவதற்காக இந்தியா – பிரன்ஸ் இடையே ஒப்பந்தம்.
  - நாடு சுதந்திரம் அடைந்து **75 ஆவது ஆண்டான 2022 இல்** இந்திட்டத்தை செயல்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.
- 2010 - களின் தலை சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராக **இந்திய கேப்டன் விராட் கோலியை** தேர்வு செய்தது **விஸ்டன் இதழ்**
- **ஆசிய மல்யுத்த சாம்பியன் ஷிப்** போட்டியில் **இந்தியாவின் சரிதா** தொடர்ந்து 2 ஆவது முறையாக தங்கம் வென்றார்.
- அமெரிக்காவை சேர்ந்த **சிட்டி பேங்க் (Citibank)** என்ற வங்கி இந்தியாவில் **நுகர்வோர் வங்கிச் சேவையில்** இருந்து வெளியேறுவதாக அறிவிப்பு.
- சைக்கிள் ஓட்டுவதற்கென்று தனியாக ஒரு வரையறையை உருவாக்கியுள்ள இந்தியாவின் **முதல் நகரம் - சண்டிகர்**
- **பிரதான் மந்திரி கிராம சதக் யோஜானாவை** திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக தேசிய அளவில் முதலிடம் பெற்ற மாவட்டம் **ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டம்.**

- சாலை இணைப்பில்லாத கிராமங்களுக்கு அனைத்து வானிலைகளுக்கும் ஏற்ற சாலை இனணப்பின் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம்

❖ 2021 ம் ஆண்டுக்கான உலக இணையதள உள்ளிடத்த குறியீட்டில் **இந்தியா 49 வது இடம்.**

- இந்தியாவும், தாய்லாந்தும் இந்த இடத்தை 49 பகிர்ந்து கொள்கின்றன.
- முதல் 5 நாடுகள்
- 1. ஸ்வீடன் 2. அமெரிக்கா 3. ஸ்பெயின் 4. ஆஸ்திரேலியா 5. ஹாங்காவ்.

❖ இந்தியாவில் பேஸ்புக் நிறுவனத்தின் முதல் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் உற்பத்தி நிலையம் தொடங்கபட்டுள்ள இடம் - **கர்நாடகா.**

❖ **அடென்** - எகிப்தில் கண்டுபிடிக்கபட்ட 3000 வருடங்கள் பழமையான நகரத்தின் பெயர்.

- நைல் நதியின் மேற்கு கரையோரத்தில் அமைந்துள்ளது.
- இது அடென் என்னும் கடவுளின் தொடர்புடையாதகும்.
- தொலைந்து போன தங்க நகரம் என அழைக்கபடுகிறது

❖ **ஆர்டிமிஸ் திட்டம்** - 2024 ம் ஆண்டிற்கான நிலவின் தென் துருவ பகுதிக்கு மனிதர்களை அனுப்பும் **நாசாவின் புதிய திட்டத்தின் பெயர்**

- 18 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி செலுத்துவதற்காக பொதுமக்கள் பதிவு செய்வதற்காக மத்திய அரசால் அறிமுகம் செய்யபட்ட வலைதளம் மற்றும் செயலியின் பெயர் - **கோவின் மற்றும் ஆரோக்யா சேது**
- **KRI நங்காலா 402 –** 53 பேருடன் கடலுக்குள் மாயமான இந்தோனேசியா நீர்மூழ்கிக் கப்பலின் பெயர்
  - இது பாலி தீவுக்கு சுமார் 100 கி.மீ தொலைவில் ஜாவா கடலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது
- வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் **பசுமைக்குடில் வாயுக்களின்** வெளியேற்றத்தை 50 முதல் 52 சதவீதம் வரை குறைக்க முடிவு செய்துள்ளதாக அமெரிக்கா அறிவிப்பு